# "ஊசி போட்டா சரியா போகும்"

சாதாரணக் காய்ச்சலாக இருந்தால் கூட டாக்டரிடம் ஏழை எளிய மக்கள் மட்டுமல்ல, படித்தவர்கள் கூட 'ஒரு ஊசி போடுங்க, டாக்டர்' என்று கேட்கிற அளவுக்கு, ஊசிமீது ஒரு மூட நம்பிக்கையே வளர்ந்திருக்கிறது.

அந்த ஊசியைப் பயன்படுத்தி இந்திய மக்களை பலிகடாக்களாக்கக் கூடிய ஆபத்தான சில வேலைகள் நடக்க ஆரம்பித்துள்ளன.

டெல்லியில் உள்ளவரான வசுந்தரா என்பவர் முதல் குழந்தை பிறந்ததும் அடுத்த 2 வருடங்களுக்குள் மீண்டும் கர்ப்பமடைய விரும்பவில்லை. டெல்லியின் பிரபலமான அரசு மருத்துவமனையான ஆல் இந்தியா இன்ஸ்ட்டிட்யூட் ஆஃப் மெடிகல் சயன்சஸ் மருத்துவமனையில் நவீன கருத்தடை மருந்து இருப்பதாகக் கேள்விப்பட்டார். 'நோரேதிஸ்டெரோன் இனன் தேட்' என்ற இந்த மருந்தை ஊசி போட்டுக் கொண்டால் மூன்று மாதங்களுக்கு கருத்தரிப்பு இராது என்று டாக்டர்கள் சொன்னார்கள்.

வசுந்தரா அந்த ஊசியைப் போட்டுக் கொண்டார். புதிய மருந்து என்று சொன்னார்களே ஒழிய முதன்முறையாக அதை வசுந்தராவிடம்தான் சோதித்துப் பார்ப்பதை டாக்டர்கள் தெரிவிக்கவே இல்லை. அந்த மருந்தால் ஏற்படக்கூடிய 'சைட் எபக்ட்ஸ்' (பின் விளைவுகள்) பற்றியும் கூறவில்லை.

முதல் ஊசி போட்டதுமே வசுந்தராவின் மாதவிலக்கு பாதிக்கப்பட்டது. கடுமையான வலி ஏற்பட்டது. 6 மாதம் ஆனதும் இந்த ஊசி இனிமேல் வேண்டாம் என்று வசுந்தரா சொன்ன போதும் டாக்டர்கள் விடவில்லை. பரிசோதனை நடந்தாக வேண்டுமே! வீட்டுக்கு நர்ஸை அனுப்பி ஊசி போட்டார்கள். ஒரு வருட காலத்துக்கு வசுந்தராவுக்கு மாதவிலக்கே ஏற்படாமல் போய்விட்டது. அதன் பிறகு ஊசியை நிறுத்தியதும் ஏற்பட்ட மாதவிலக்கு வசுந்தராவை வலியில் துடிக்கவைத்தது.

மருந்தை நிறுத்திய பிறகும் மீண்டும் மாதவிலக்கு ஏற்பட்ட பிறகும் வசுந்தராவால் கர்ப்பமடையமுடியாத நிலை ஏற்பட்டது.

ஐந்து வருடம் கழித்து இப்போது கர்ப்பமுற்றுள்ள வசுந்தராவுக்கு குழந்தை பாதிக்கப்பட்டதாகப் பிறக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. அவரிடம் மருந்தை முதன்முதலாக சோதித்துப் பார்த்த பெரிய டாக்டர்கள் மருத்துமனையில் இப்போது இல்லை. மேல்நிலை ஆராய்ச்சிக்கு வேறெங்கோ போய்விட்டார்கள்.

இது போல், பொதுமக்களிடம் தெரிவிக்காமல் அவர்கள் மீது புது மருந்துகளை சோதனை செய்து பார்க்கும் கொடுமை இந்தியாவில் சகஜமாக நடக்கிறது. வசுந்தரா நிகழ்ச்சி அதில் ஒன்று.

இப்படிப்பட்ட ஆபத்தான நிலையில், ராஜீவ் காந்தியின் அரசாங்கம் அமெரிக்க அரசுடன் ஊசிமருந்து சோதனை பற்றி நான்கு மாதங்களுக்கு முன்பு ஒரு ஒப்பந்தம் போட்டிருப்பது மேலும் நிலைமையை ஆபத்தாக்கியிருக்கிறது.

இந்த ஒப்பந்தப்படி அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் புதிய ஊசி மருந்துகளைப் பற்றிய ஆராய்ச்சியில் இந்திய விஞ்ஞானிகளும் கலந்து கொள்ள 9 கோடி 36 லட்சம் ரூபாய்களை அமெரிக்கா இந்தியாவுக்குத் தருகிறது. சட்டென்று கேட்டால், நமக்கு லாபம் மாதிரி தெரியலாம். ஆனால் அசலான நிலை இதுதான். அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் ஊசி மருந்தை இந்தியாவில் சோதித்துப் பார்க்கும் பணியில் இந்திய விஞ்ஞானிகள் ஈடுபடுவார்கள். இந்த சோதனையில் தெரியவரும் தகவல்களை இரு தரப்பும் பகிர்ந்து கொள்வார்கள்.

இதில் இரண்டு ஆபத்துக்கள் இருக்கின்றன. முதல் ஆபத்து வசுந்தராவுக்கு ஏற்பட்ட நிலைமை போன்றது. பொதுமக்களுக்களுக்குத் தெரியாமல் அவர்கள் மீது புது ஊசி மருந்துகளை சோதிப்பது அயோக்கியத்தனம். இரண்டாவது ஆபத்து மிகப் பெரிய ஆபத்து. ஊசி மருந்துகளை இந்தியாவின் பல்வேறு பகுதி மக்கள் மீது சோதித்துப் பார்த்த பிறகு தெரியவரும் தகவல்களில் முக்கியமானவை உண்டு. இந்தியர்களின் ரத்த வகை, நோய் எதிர்ப்பு சக்தி, எந்தெந்த கிருமிகளை எதிர்க்கும் பலம் உள்ளது. எந்தெந்த கிருமிகளை எதிர்க்கும் பலம் இல்லை. என்ற அடிப்படை தகவல்களே இவை. ஒன்பது கோடி ரூபாய் செலவில் நடத்தும் சோதனைகளில் கிடைக்கும் இந்த மாதிரி தகவல்களிலிருந்து, இந்தியாவின் நிலப்பகுதிகளில் எங்கெங்கே எப்படிப்பட்ட உடற்கூறு நிலை உள்ளது என்பதே தெரிந்துவிடமுடியும்.

இந்தத் துல்லியமான தகவல்களைக் கொண்டு மக்களுக்கு மருந்தும் தயாரிக்கலாம், விஷமும் வினியோகிக்கலாம் என்பதுதான் ஆபத்தான நிலை. ஏனென்றால் உலகத்தில் ஒரு நாடு இன்னொரு நாடு மீது போர் நடத்தும்போது வழக்கமான கத்தி, துப்பாக்கி, குண்டு, டாங்கி சண்டை மட்டும் நடத்துவதில்லை. ஒரு பகுதி முழுவதும் விஷக்கிருமிகளைப் பரப்பி (கண்ணுக்கே தெரியாத ஆயுதம் இது) மக்களைக் கொல்லலாம். போபால் விஷ வாயுவில் ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டது போன்ற நிலையை இன்னும் பல மடங்கு கொடூரமானதாகவே செய்யலாம். உலகில் பல இடங்களில் அமெரிக்கா இத்தகைய விஷக்கிருமிப் போரை (பாக்டிரியலாஜிகல் வார்) பலமுறை கடந்த காலத்தில் நடத்தியிருக்கிறது.

பி.எல்.480 என்ற கோதுமை உதவி தரும் திட்டத்தின் கீழ் அமெரிக்கா நமக்கு கோதுமை கொடுத்த போது இங்கு அதனோடு சேர்ந்து பார்த்தீனியம் என்ற விஷச்செடி விதையும் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அமெரிக்காவுடன் ராஜீவ்காந்தி அரசு போட்ட ஊசிமருந்து ஒப்பந்தத்தின் ஆபத்தை பி.டி.ஐ, செய்தி நிறுவன விஞ்ஞான நிருபர் ஜெயராமன் அம்பலப்படுத்தியிருக்கிறார். உடனே ராஜீவ் அரசாங்கம் மறுப்பறிக்கை வெளியிட்டது. இந்தத் திட்டத்தால் எந்த ஆபத்தும் வராமல் தடுக்க ஒரு விதி போடப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறது. அதாவது எந்த ஊசி மருந்தையும் சோதித்துப் பார்க்க முதலில் இந்திய அரசின் மருந்து (டிரக்) கண்ட்ரோலர் அனுமதியும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கழக (ஐ.சி.எம்.ஆர் ) அனுமதியும் பெற்றாக வேண்டும் என்று விதி போட்டுவிட்டார்களாம்.

இப்போது இந்தியாவில் டிரக் கண்ட்ரோலர் தடை செய்த பல மருந்துகளே சாதாரண கடைகளில்கூட கிடைக்கின்றன. அந்த லட்சணத்தில் இருக்கிறது டிரக் கண்ட்ரோலரின் ஆட்சித்திறமை.

அதுமட்டுமல்ல, அண்மையில் பல பெண்கள் அமைப்புக்களும் மருத்துவர்களும் ஆட்சேபித்த ஒரு கருத்தடை மாத்திரையான செண்ட்ரோ - க்ரோமன் என்ற மாத்திரையை நாடு முழுவதும் சோதனைக்கு பயன்படுத்த டிரக் கண்ட்ரோலர் அனுமதி வழங்கும்போது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் அனுமதியையோ அங்கீகாரத்தையோ கேட்கவே இல்லை. சமூக அக்கறையுள்ள சிலர் கூப்பாடு போட்ட பிறகுதான் இதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றி யோசனையே வந்தது.

இந்த நிலை பற்றியெல்லாம் எந்தக் கவலையும் ராஜீவ் காந்தியின் அரசுக்கு இல்லை. ஒப்பந்தம் போடுவது என்றாலே தயாராகப் பேனாவைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிற பிரதமர் அல்லவா! அரசியல் ஒப்பந்தம் மாதிரி விஞ்ஞான ஒப்பந்தமும் போட்டுவிட்டார்கள்!

ஞாநி
விசிட்டர்
**25-11-1987**